Cambridge International A Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Level

**TAMIL** | **9689/04**

Paper 4 Texts | **October/November 2015**

**2 hours 30 minutes**

No Additional Materials are required.

*5486092213*

**READ THESE INSTRUCTIONS FIRST**

An answer booklet is provided inside this question paper. You should follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper ask the invigilator for a continuation booklet.

Answer **three** questions, each on a different text. You must choose **one** question from Section 1, **one** question from Section 2 and **one other**.
Write your answers in **Tamil**.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.

You should write between 500 and 600 words for each answer.
All questions in this paper carry equal marks.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் விடைகள் எழுதுவதற்கு ஒரு புத்தகம் கொடுக்கப்படும். அதில் முன்பக்கத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எழுதி இருப்பதைப் பார்த்து அதன்படி செய்யவும். விடைகள் எழுதுவதற்காக கொடுக்கப்பட்ட புத்தகத்தை நிரப்புவது பற்றிய கட்டளைகள் தமிழில் வேண்டுமானால் இந்தக் கேள்வித் தாளின் இரண்டாவது பக்கத்தில் காண்க. மேலும் உங்களுக்கு விடை எழுதுவதற்குப் பேப்பர் தேவையாக இருந்தால் மேற்பார்வையாளரிடம் கேட்கவும்.

ஏதாவது மூன்று கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.
விடைகளைத் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளைப் பயன்படுத்தக் கூடாது.
பாடப் புத்தகங்களைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் கொண்டுபோகக்கூடாது.

நீங்கள் ஒவ்வொரு விடையையும் 500 முதல் 600 சொற்களுக்கு இடையில் எழுத வேண்டும்.
எல்லா விடைகளுக்கும் சமமான மதிப்பெண்கள் கொடுக்கப்படும்.

விடைகள் எழுதுவதற்காக கொடுக்கப்பட்ட புத்தகத்தை நிரப்புவது பற்றிய கட்டளைகள் தமிழில் வேண்டுமானால் இந்தக் கேள்வித் தாளின் இரண்டாவது பக்கத்தில் காண்க.


This document consists of **6** printed pages, **2** blank pages and **1** Insert.

DC (NH) 104033/3
© UCLES 2015

CAMBRIDGE International Examinations

**விடைகள் எழுதும் புத்தகத்தில் செய்ய வேண்டியவை**

விடைகள் எழுதும் புத்தகத்தின் முன் பக்கத்தில் எல்லாப் பெட்டிகளிலும் எழுதவும்.
கருநீலம் அல்லது கருப்புப் பேனாவால் எழுதவும். எந்த பார்க்கோட்டிலும் எழுதவேண்டாம்.
விடைகளை விடைகள் எழுதும் புத்தகத்தில் எழுதவும். பேப்பரின் இரண்டு பக்கமும் எழுதவும். ஒவ்வொரு கேள்வியின் விடைகளுக்கும் இடையில் இரண்டு இடங்கள் விடவும்.
நீ விடை அளிக்கும் கேள்வியின் நம்பரை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீ எழுதும் கேள்வி பகுதிகளாக இருந்தால் உதாரணமாக 1a, கேள்வியின் பகுதியை இரண்டாவது மார்ஜினில் எழுதவும். இரண்டாவது விடை எழுதும் புத்தகம் வாங்கி விடை எழுதி இருந்தால் அதையும் முதல் புத்தகத்துடன் சேர்த்து வைக்கவும்.

© UCLES 2015

**BLANK PAGE**

© UCLES 2015 

## பகுதி 1

**1 ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a) அகநானூறு**

வயிரத் தன்ன வைஏந்து மருப்பின்
வெதிர்வேர் அன்ன பரூஉமயிர்ப் பன்றி
பறைக்கண் அன்ன நிறைச்சுனை பருகி
நீலத் தன்ன அகல் இலைச் சேம்பின்
பிண்டம் அன்ன கொழுங்கிழங்கு மாந்தி
பிடிமந் தன்ன கல்மிசை ஊழ்இழிபு
யாறுசேர்ந் தன்ன ஊறுநீர்ப் படாஅர்ப்
பைம்புதல் நளிசினைக் குருகுஇருந் தன்ன
வண்பிணி அவிழ்ந்த வெண்கூதாளத்து
அலங்குகுலை அலரி தீண்டித் தாது உகப்
பொன் உரை கட்டளை கடுப்பக் காண்வரக்
கிளை அமல் சிறுதினை விளைகுரல் மேய்ந்து
கண் இனிது படுக்கும் நல்மலை நாடனொடு
உணர்ந்தனை புணர்ந்த நீயும், நின் தோட்
பணைக்கவின் அழியாது துணைப்புணர்ந்து, என்றும்
தவல் இல் உலகத்து உறைஇயரோ தோழி
'எல்லையும் இரவும் என்னாது கல்லெனக்
கொண்டல் வான் மழை பொழிந்த வைகறைத்
தண்பனி அற்சிரம் தமியோர்க்கு அரிது' என
கனவினும் பிரிவு அறியலனே, அதன்தலை
முன் தான் கண்ட ஞான்றினும்
பின்பெரிது அளிக்கும் பண்பினானே--(பரணர், பாடல் 178)

**(i)** தலைவிக்கு தோழி கூறிய மகிழ்ச்சியான செய்தி என்ன? அவர் உள்ளுரை (இறைச்சி) மூலம் உணர்த்தியது எப்படி?

**(ii)** அன்ன (தன்ன) என்ற உவமை உருபு மூலம் பரணர் பயன்படுத்தும் உவமைகளில் ஏதேனும் சில உவமைகளை விளக்கவும்? [25]

**அல்லது**

**(b) புறநானூறு**

**(i)** 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தொடங்கும் பாடலில் கணியன் பூங்குன்றனார் விளக்கும் கருத்து என்ன?

**(ii)** 'கேளிர்', 'நீர்வழிப் படூஉம் புணைபோல்' — இவற்றின் பொருள் என்ன? [25]

© UCLES 2015

**2** **திருக்குறள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)**

உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று
உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்
ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்
ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை

**(i)** ‘ஒருவந்தம்’, ‘அதர்வினாய்’ என்ற சொற்களின் பொருள் என்ன?

**(ii)** ஊக்கம் உடைமை பற்றி மேற்கூறிய நான்கு குறள்களிலும் ஏனைய குறள்களிலுட வள்ளுவர் வலியுறுத்துவதை விளக்கவும். [25]

**அல்லது**

**(b)** இன்னா செய்யாமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக. [25]

© UCLES 2015

**3** தேவாரம் – அப்பர்

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)**

கூற்றாயினவாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே

**(i)** திருவதிகை வீரட்டானப் பதிகத்தில் அப்பர் தனது வயிற்று நோயைப் போக்க எப்படியெல்லாம் இறைவனை வேண்டுகிறார் என்பதை பத்து பாடல்களில் இருந்தும் தொகுத்து எழுதவும்.

**(ii)** அதிகைக் கெடில வீரட்டானம்—என்பதன் பொருள் என்ன? [25]

அல்லது

**(b)** **(i)** ‘பெற்றம் ஏற்றுகந்தீர் சுற்றம் வெண்டலை கொண்டு அணிந்தீர்’ என்று சிவபெருமானை வருணிக்கும் திருநாவுக்கரசர் சிவனைப் பற்றி இந்தப் பதிகத்தில் வேறு என்ன சொல்கிறார்?

**(ii)** இந்தப் பதிகம் பாட நேர்ந்த சூழ்நிலை என்ன? [25]

## பகுதி 2

**4 இக்காலக் கவிதைகள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** **பாரதியார்**
'மழை' என்னும் கவிதையின் நயத்தை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி எழுதவும். [25]

**அல்லது**

**(b)** **பாரதிதாசன்**
'எது கலை' என்னும் பாடலில் கலை என்னும் சொல்லின் அழகு, பொருளின் ஆழம் ஆகியவற்றை பாரதிதாசன் விளக்கும் நயத்தை எடுத்துக்காட்டுகளுடன் தரவும். [25]

**5 நாடகம்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** மன்னப்பன் மனம் மாறியது ஏன்? நாடக ஆசிரியர் மு.வ. பணம் பற்றி வெளியிடும் கருத்துக்கள் யாவை? [25]

**அல்லது**

**(b)** 'காதல் எங்கே?' நாடகத்தில் மதிமுகம் பேசும் வசனம் வாயிலாக நீங்கள் அறிவது என்ன? நாடகத்தில் அவருடைய பங்கினை மதிப்பிடுக. [25]

**6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** ஆசிரியர் நா.பார்த்தசாரதியின் 'புதியபாலம்' கதையில் பொன்னம்பலம் கட்டிய பாலத்தினால் விளைந்த நன்மை தீமைகள் என்ன? இதை விவரிக்கும் ஆசிரியர் நடை எப்படி இருக்கிறது? [25]

**அல்லது**

**(b)** 'இவன்' என்ற நீண்ட கதை மூலம் ஜெயந்தன் பல சமுதாயக் கொடுமைகளைச் சுட்டிக்காட்டுகிறார். அவைகளை எடுத்துக்காட்டுகள் காட்டி விளக்கவும். [25]

© UCLES 2015

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.